பேச்சு - வகுப்பு 3 / 4

## சோமசுந்தர புலவர்

இயற்கை அழகின் கருவூலமான ஈழநாட்டில் நவாலியூர் என்ற இடத்தில் தமிழ்த் தாயின் மனம் குளிர சோமசுந்தரப் புலவர் அவதரித்தார். இவர் தமிழையும் ஆங்கிலத்தையும் பிழையறக் கற்றார். வடமொழி நூல்களையும் கற்று அறிந்தார். அகவை பதினைந்தாக இருக்கும் போதே தமிழ்ப் பாக்களை இயற்றத் தொடங்கினார். ஆசிரியப் பணியில் சேர்ந்து கொண்ட புலவர் நாற்பது ஆண்டுகள் தமிழ் அன்னைக்குத் தொண்டு புரிந்தார். ஆசிரிய பணியில் இருந்து இளைப்பாறிய பின்பும் தன் பணிகளைத் தொடர்ந்தார். தம்மிடம் பயின்ற மாணவர்கள் தமிழிற் சிறந்தோராக விளங்கித் தொண்டாற்ற வழி செய்தார்.

புலவரது பாடல்கள் எளிய நடையில் மக்களது வாழ்க்கையை மையமாகக் கொண்டிருந்தன. “ ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே” “ கத்தரித் தோட்டத்து மத்தியிலே நின்று காவல் புரிகின்ற சேவகா” என்பன சில உதாரணங்கள் ஆகும். இந்த சிறுவர் பாடல்கள் அன்றும், இன்றும் அனைவரது மனங்களிலும் நீங்கா இடத்தினைப் பெற்றுள்ளன. இதனால் இவரைத் தங்கத் தாத்தா என்று அனைவரும் அன்புடன் அழைத்தனர்.

இவற்றை விட, இலங்கை வளம். தாலவிலாசம், தந்தையார் பதிற்றுப்பற்று, கதிரைச் சிலேடை வெண்பா போன்ற நூல்களையும் தமிழ் அன்னைக்கு அன்பு காணிக்கையாக சமர்ப்பணம் செய்துள்ளார். கவிதைத் துறையில் மட்டுமன்றி நாடகத்துறையிலும் சிறந்த ஈடுபாடு கொண்டிருந்தார். உயிரிளங்குமரன் என்ற நாடகத்தை எழுதி நடிப்பித்து பெரும் பாராட்டினையும் பெற்றார். தங்கத் தாத்தா ஈழமக்கள் மனதில் ஒரு சிறப்பு இடத்தைப் பெற்றுள்ளார்.

**நன்றி, வணக்கம்.**